DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.

**Spl.S.C. No.24/2024**

**P.W. 1**

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.மாணிக்கம்** |
| Father's Name | : | **திரு.நல்லய்யன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 27 |

(Accused 1 and 2 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of November 2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மண்ணச்சநல்லூர் அருகே உள்ள இனாம் கல்பாளையத்தில் வசிக்கிறேன். எங்கள் ஊரில் என்னை எங்கள் ஊரில் விஜய் மாணிக்கம் என்று அழைப்பார்கள். நான் சமயபுரத்தில் உள்ள ஒரு கோழிக்கடையில் வேலை பார்க்கிறேன். நான் இந்து, பறையர் வகுப்பைச் சேர்ந்தவன் ஆவேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் இருவரும் இந்து, முத்துராஜா வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 24.01.2024 அன்று சதீஷ்குமார் மற்றும் பிரகாஷ் ஆகிய இருவரும் பிரபாகரன் என்பவரிடம் வம்பு இழுத்து இருக்கிறார்கள். கடந்த 29.01.2024 அன்று சதீஷ்குமார் மற்றும் பிரகாஷ் ஆகிய இருவரும் அன்று இரவு சுமார் 7 மணி அளவில் இனாம் கல்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகே பிரபாகரனிடம் மீண்டும் வம்பு இழுத்து இருக்கிறார்கள். என்னை பிரபாகரன் போன் பண்ணி சொல்லி வரச் சொன்னான். நான் உடனே அங்கு சென்றேன். அப்போது அங்கு வைத்து சதீஷ்குமார் என்னை பார்த்து இனாம் கல்பாளையத்தில் இருக்கிற பையங்களுக்கு இவ்வளவு தைரிய புண்டையா

என்று சொன்னான். அப்போது பிரகாசம் என்னை பார்த்து நெஞ்சில் கை வைத்து இவ்வளவு தைரிய புண்டையா என்று சொன்னான். பிரகாஷ் என் நெஞ்சில் கை வைத்து தள்ளியபோது பற புண்ட மகனுக்கு இவ்வளவு தைரியமா என்று சொல்லி கத்தியால் எனது வலது கையில் குத்திக் கிழித்துவிட்டான். நான் சத்தம் போடவும் அக்கம் பக்கத்தில் உள்ள சரவணன், பிரபு, மேலசீதேவி மங்கலத்தை சேர்ந்த பழனிவேல், முருகேசன் ஆகியோர்கள் வந்தார்கள். அப்போது சதீஷ்குமாரும் பிரகாசும் என்னை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொன்னார்கள். எனது பெரியப்பா மகன் முருகேசன் என்பவர் என்னை மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து என்னை மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வைத்து எனக்கு ஒன்பது தையல் போடப்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் இருந்து வந்து என்னை விசாரித்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் **அரசு தரப்பு சான்றாவணம் 1** ஆகும். என்னிடம் காட்டப்படுவது சம்பவத்தின் போது எதிரி சதீஷ்குமார் எனது வலது கையில் குத்திய கத்தி ஆகும். அந்த கத்தி **அரசு தரப்பு சான்று பொருள் 1** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் கொஞ்சம் கொஞ்சம் படிக்க தெரியும். எனக்கு எழுதத் தெரியாது. சம்பவ இடத்திற்கும் மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் இருக்கும். நான் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றேன். மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அருகில் தான் மண்ணச்சநல்லூர் காவல் நிலையம் அமைந்து இருக்கிறது என்றால் சரியல்ல. சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில்

உள்ளது. கடந்த 24.01.2024 அன்று நடைபெற்ற சம்பவம் தொடர்பாக நானும், பிரபாகரனும் எவ்வித புகார் கொடுக்கவில்லை. நான் மருத்துவமனைக்குச் சென்றபோது எனக்கு சுயநினைவு குறைவாக இருந்தது. எனக்கு திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்றபோதுதான் சுயநினைவு முழுமையாக வந்தது. மண்ணச்சநல்லூர் மருத்துவமனைக்கு நான் சென்றபோது அங்கு இருந்த மருத்துவர் என்னிடம் எனக்கு காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று விசாரித்தார். மண்ணச்சநல்லூர் மருத்துவர் என்னை என்ன நடந்தது என்று கேட்டபோது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் என்னை தாக்கினார்கள் என்று குறிப்பிடவில்லை. என்னை எதிரி ஆரஞ்சு வண்ணம் உள்ள கைப்பிடி கொண்ட கத்தியால் தான் குத்தினார் என்று புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன். என் சத்தம் கேட்டு வந்த நபர்கள் என்று நான் முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்ட நபர்கள் பெயரை புகார் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன். நான் மருத்துவமனைக்குச் செல்லும்போது பிரபாகரன் மற்றும் முருகேசன் என் உடன் வந்தார்கள். நான் காயம் பட்டவுடன் முதலில் மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. எங்கள் ஊர் பிரச்சனை தொடர்பாக நான் அடிக்கடி காவல் நிலையம் சென்ற பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எதிரிகள் யாரும் என்னை கத்தி கொண்டு தாக்கவில்லை என்றும், சாதி பெயரைச் சொல்லி பொது இடத்தில் இழிவுபடுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பு எனக்கு எதிரிகளை தெரியாது என்றும், எதிரிகளுக்கும் என்னைப் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எங்கள் ஊருக்கும், எதிரிகளின் ஊருக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் இரண்டு கிலோமீட்டர் இருக்கும். ஏற்கனவே நடைபெற்ற பிரச்சனை எதிரிகளுக்கும், பிரபாகரனுக்கும் இடையில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். அதில் எனக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது. இந்த வழக்கு தொடர்பாக கடந்த 29 ஆம் தேதி காலையில் நான் திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னிடம் வந்து

AW

விசாரித்தார்கள். என்னிடம் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் போலீசார் வந்து மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தை நிலைய எழுத்தர் எழுதினார். அப்போது என்னுடன் பிரபாகரன் மற்றும் முருகேசன் இருந்தார்கள். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் அவர்கள் உடன் இருந்ததாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை. திருச்சி அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் சேர்ந்த போது மருத்துவரிடம் என்னை தெரிந்த நபர் தாக்கினார் என்று தான் கூறினேன். அப்போது மருத்துவரிடம் சம்பவம் என் வீட்டில் அருகே வைத்து நடைபெற்றது என்று சொன்னேன். சம்பவத்திற்கு முன்பு எனக்கு எதிரிகளின் பெயரும், அவர்களின் தகப்பனார்களின் பெயரும் தெரியாது. சம்பவத்திற்கு முன்பு எதிரிகளுக்கும் என்னை யார் என்று தெரியாது. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரிகளின் அப்பா பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் நான் தான் மண்ணச்சநல்லூரில் இருந்து ஈச்சம்பட்டி செல்லும் சாலையில் வந்து மதுபோதையில் சத்தம் போட்டு கொண்டு இருந்தேன் என்றும், அப்போது அந்த சாலையில் சென்ற பொதுமக்களிடம் தகராறு செய்தேன் என்றும், அங்கு வைத்து ஏற்பட்ட தள்ளுமுள்ளில் கம்பி வேலியில் விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரபாகரனுக்கும், எதிரிகளுக்கும் இடையில் உள்ள முன் விரோதம் காரணமாக நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.